**நாள்**: 27.01.2026
O.S. No. 45/2022

**பி.சா.2**

**பெயர்: மகேந்திரன் , த/பெ. மாரியப்பன்**

**<u>வாதிகள் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னுடை முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 5 பாரா 5ல் வாதி வீரமணி, வள்ளியம்மை, மாரிப்பன் ஆகியோர்களை சட்டப்படியான வாரிசுகளை தரப்பினராக சேர்த்து பாகவீதம் பிரித்துதர கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டுமே தவிர ஆவணம் செல்லதக்கதல்ல என விளம்புகை பரிகாரம் மட்டும் கேட்டுள்ளது சட்டப்படி சரியானதல்ல என கூறியுள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. புலஎண் 56/6 ல் 8 ஏர்ஸ்கு மட்டும்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 8 ஏர்ஸ் சொத்தில் RCC ஓட்டுக்கட்டிடம், தென்னை மரம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து என் தாயார் வள்ளியம்மைக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி வள்ளியம்மை எனக்கு தனிப்பட்ட முறையில் தாவா சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் ஏற்படுத்தி தரவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் மாரியப்பன் அவர்களும் எவ்வித பதிவு ஆவணமும் என்தாயார் தாவா சொத்தை பொறுத்து எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். ( சாட்சி தாமாக முன்வந்து எனக்கு தெரியவில்லை என சாட்சியம் அளித்தார்). தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்று எதுவும் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. என் தாயார் வள்ளியம்மை தாவா சொத்தை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் காலமாகிவிட்ட பின்

அவரது வாரிசுகள் அனைவருக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் என் தகப்பனார் சம்பாதித்த சொத்து அதனால் அது குறித்து அவர் என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து என் தாயாருக்கு உரிமையுள்ள சொத்து என்ற நிலையில் அதனை பொறுத்து பூரா சொத்தையும் என் பெயருக்கு மாற்றம் செய்ய என் தகப்பனாருக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எனவே, என் தகப்பனாரால் எனக்கு எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமான ஆவணஎண் 1999/2014 இந்த வாதிகளை கட்டுப்படுத்த கூடியதல்ல என்றால் சரியல்ல. எனவே, வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடதல்ல என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.01.27 07:00:46 +0530